# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 12938/SCIC/2025**

திருமதி ம. தனசேகரி    மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/    ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கொன்னூர்,
சென்னை 600 053

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 12.06.2025 |
| 2. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 22.07.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 29.07.2025<br>12.08.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 25.08.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், கொன்னூர் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 12.06.2025 தேதியிட்டு அனுப்பிய மனுவில், திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் வட்டம் நொளம்பூர் கிராமம் சர்வே எண்.186/2 க்கான சொத்தானது 30.03.2012 அன்று பத்திர எண்.1462/2012 ஆக கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும், இதுநாள் வரையில் தனது அசல் ஆவணத்தினை தான் பெறவில்லையென்றும்,

எனவே மேற்படி கிரைய ஆவணத்தின் அசல் ஆவணத்தினை வழங்குவது குறித்து தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் தனது மகன் திரு சாமுவேல் ராஜ்குமார் என்பவருடன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு வே. கோபிநாதன், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கொன்னூர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரர் ஆவண எண்.1462/2012 என்பது 2012ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டதாகவும், அதன் அசல் ஆவண நகலினை வழங்குமாறு கோரியுள்ளார். நீண்ட காலமாக தனக்கு உடல்நிலை சரியில்லாமலிருந்த காரணத்தாலும், மேலும் சில தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளினாலும் தன்னால் 2012ம் ஆண்டிலேயே அசல் ஆவணத்தினைப் பெறமுடியாமல் போனதாகவும், ஆனாலும் அதுகுறித்து தான் பதிவுத்துறையிடம் தொடர்ந்து முயற்சி செய்து வந்ததாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் 12.08.2025 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரர் கோரிய ஆவண எண்.1463/2012 தொடர்பாக தங்கள் அலுவலகம் முழுவதும் நன்கு தேடப்பட்ட நிலையில், மேற்படி ஆவணம் அலுவலகத்தில் இல்லையென்றும், ஆனால் தங்கள் அலுவலகத்தில் Destruction செய்யப்படவும் இல்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆவணப்பதிவிலிருந்து இரண்டு வருடங்களுக்குள் மனுதாரர் ஆவணத்தினை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றிருக்கவேண்டுமென்றும், ஆனால் மனுதாரர் அவ்வாறு ஆவணத்தினைப் பெறத்தவறியுள்ளதாகவும், மேற்படி ஆவணம் தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லையென்றும் இன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார்.

4. எனவே, மனுதாரர் 15.09.2026 அன்று முற்பகல் 11 மணியளவில் சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன் பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்திற்கு செல்லுமாறு ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது. அதனடிப்படையில் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அசல் ஆவணம் அலுவலகத்தில் பராமரிப்பில் இல்லாதது குறித்து சான்றிதழ் மற்றும் ஆவண எண்.1462/2012 என்பதற்கான உரிய சான்றொப்பமிடப்பட்ட அசல் நகலினை (Duplicate copy of document) கட்டணமின்றி இலவசமாக வழங்குமாறும், அதுகுறித்த அறிக்கையினை 30.09.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12938/SCIC/2025</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கொன்னூர், சென்னை 600 053

**மனுதாரர்**

திருமதி சு. தனசேகரி,
க/பெ மன்மதன்,
நெ.15/8, அஞ்சுகம் தெரு,
ராணி அண்ணா நகர், அரும்பாக்கம்,
சென்னை 600 106

TK/PS